# உறவுகளைப் புதுப்பிக்கும் வகையில் நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்

## கனடியத் தமிழர் நிகழ்வுகள்

வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 19வது வருடாந்த ஒன்றுகூடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி) Scarborough Milliken Park இல் பல நூற்றுக்கணக்கான மக்களுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தமது கல்லூரித் தாயை நினைவு கூறுமுகமாகக் கல்லூரியின் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் மிகுந்த ஆர்வத்துடனும் மிக்க மகிழ்ச்சியுடனும் முன்னைய நிகழ்வுகளைவிடப் பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூடியமை சங்கத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருந்தது என்றால் அது மிகையல்ல.

கல்லூரியின் முன்னாள் அதிபர்கள் அமரர்கள் திரு. ஊ. குணபாலசிங்கம் மற்றும் பண்டிதர் மு. இராசையா அவர்கள் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்விற்குச் சங்கத்தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஊ. இராஜநாயகம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தமை பாராட்டுக்குரியது.

தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவிகள் திருமதிகள் கலா செல்வம், கவிதா காந்தன் குழுவினர் இனிமையாக கல்லூரிக்கீதம் பாடினர்.

பிரதம விருந்தினர் திரு. ஊ. இராஜநாயகம் அவர்கள் சங்கக் கொடியை ஏற்றினார்.

அடுத்து திரு, திருமதி. இராஜநாயகம் இருவரும் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை திருமதி மகாலக்ஷ்மி பாலதேவன் (செல்வி நல்லதம்பி) அவர்களும் பழைய மாணவர்களால் பொன்னாடை போற்றிக் கௌரவிக்கப்பட்டனர்.

திரு. ஊ. இராஜநாயகம் அவர்கள் தமதுரையில் சங்கத்தின் முன்னுதாரணமான சிறந்த செயற்திட்டங்களையும் அதனைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்திவரும் சங்கத்தின் தலைவரையும் சக நிர்வாகத்தினரையும் பாராட்டியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

உறவுகளைப் புதுப்பிப்பதாகவும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் ஒன்றுகூடி உண்டு மகிழ்வதாகவும் ஒன்றுகூடல் விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக மைதானம் நிறைந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து பங்குபற்றியவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர்கள் உண்டு மகிழ்வதற்கும் சுவையான சைவ மற்றும் அசைவ ஒடியற்கூழ் உட்பட பலவிதமான அறுசுவை உணவு வழங்கினார்கள். விளையாட்டு நிகழ்ச்சிகளை ஆசிரியர் திரு. தனபாலசுந்தரன் அவர்கள் மிகச்சிறப்பாக நெறிப்படுத்தினார். நிறைவாக சங்கத்தின் செயலாளர் திரு. சு. சிவகுமார் நன்றிகூறினார்.

அன்றைய பொழுதை ஓர் இனிய பொழுதாகவும் தம்மை உயர்ந்த நிலைக்கு ஆளாக்கிய கல்லூரி அன்னைக்கு நன்றி கூறும் விழாவாகவும் ஒழுங்குசெய்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களையும் உணவுத் தயாரிப்பு மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு உதவிய தன்னார்வத் தொண்டர்களையும் வருகை தந்திருந்த அனைவரும் பாராட்டிச்சென்றனர்.








